உ

தணிகை மலைக்கு வாருங்கள்    யாமிருக்க பயமேன்    முருகன் அழகைப் பாருங்கள்



tnhrce.org

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

# திருத்தணிகை

## ஆடிகிருத்திகை-தெப்பத்திருவிழா

## அழைப்பிதழ்

**ஆடிஅஸ்வினி 13.08.2017 - ஆடிபரணி 14.08.2017 - ஆடிகிருத்திகை 15.08.2017**

**15.08.2017 முதல் 17.08.2017 வரை தெப்பத்திருவிழா**


தணிகை மலையை சேரேனோ
முருகன் அழகைப் பாரேனோ
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி உற்சவர்
thnrce.org

உ

திருத்தணி முருகன் வழித்துணை வருவார்

மாண்புமிகு இதயதெய்வம்

புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் நல்லாட்சியில்

இந்து சமய அறநிலையத்துறைக்கு
எண்ணற்ற திட்டங்களை
வாரி வழங்கிக் கொண்டிருக்கும்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின்
நல்லாட்சியில் மற்றும் நல்லாசியுடன்

tnhrce.org

திருத்தணிகை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி
திருக்கோயிலில் வருகின்ற **13.08.2017** முதல் **17.08.2017**
வரை நடைபெற உள்ள **ஆடி கிருத்திகை** மற்றும்
**தெப்பத்திருவிழாவிற்கு**

வருகை தரும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
நாடாளுமன்ற மற்றும் சட்டப் பேரவை உறுப்பினர்கள்,
அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின்
பிரதிநிதிகள் மற்றும்
பக்த கோடிகள் அனைவரையும்
வருக வருக என வரவேற்கிறோம்.

**செ.சிவாஜி** B.Sc., B.L., M.A., M.A., M.B.A., M.Phil.,
இணை ஆணையர் / செயல் அலுவலர்

**வே.ஜெயசங்கர்**
தக்கார்



வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை
அருள்மிகு சண்முகர்
tnhrce.org

உ

தணிகை மலைக்கு வாருங்கள் முருகன் அழகைப் பாருங்கள்

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
# திருத்தணிகை
## ஆடிகிருத்திகை-தெப்பத்திருவிழா
## அழைப்பிதழ்

"சீர் கொண்ட தெய்வ வதனங்கள்
ஆறும் திகழ் கடப்பந்
தார் கொண்ட பன்னிரு தோள்களும்
தாமரைத் தாள்களும் ஓர்
கூர் கொண்ட வேலும் மயிலும்
நற் கோழிக் கொடியும் அருட்
கார் கொண்டவன்மைத் தணிகாசலமும்
என் கண்ணுற்றதே."

-வடலூர் இராமலிங்க அடிகளார்

பேரன்புடையீர்,

tnhrce.org

தெய்வ மணங்கமழும் தமிழ்த்திருநாட்டில், தமிழ்க் கடவுளாம் முருகப்பெருமான் எழுந்தருள் புரியும் அறுபடை வீடுகளில் ஐந்தாவது படை வீடாய்த் திகழும் "குன்று தோறாடல்" எனப் போற்றப்படுவது திருத்தணிகைத் திருத்தலமாகும் இத்திருத்தலத்தை

**"வரை இடங்களுக்குள் சிறந்தது**
**இத்தணிகைமால் வரையே"**

என்று கந்தபுராணம் அருளிய கச்சியப்ப சிவாச்சாரியார் பாடிப்புகழ்ந்துள்ளார், சிறந்த பிரார்த்தனை தலமாய் விளங்கி, அன்பால் நினைத்து, வேண்டுவோர் வேண்டியன எல்லாம் அள்ளித் தரவல்ல இத்தணிகைத் திருத்தலத்தில் நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 ஆடி மாதம் 28ம் நாள் **(13.08.2017)** ஞாயிற்றுக்கிழமை துவங்கி ஆடிக்கிருத்திகை திருவிழாவும், தெப்பத்திருவிழாவும் பின்வரும் வண்ணம் நடைபெற உள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆடி 28 | 13.08.2017 | ஞாயிறு | ஆடி அஸ்வினி | |
| ஆடி 29 | 14.08.2017 | திங்கள் | ஆடி பரணி | |
| ஆடி 30 | 15.08.2017 | செவ்வாய் | ஆடி கிருத்திகை | முதல் நாள் தெப்பம் |
| ஆடி 31 | 16.08.2017 | புதன் | | இரண்டாம் நாள் தெப்பம் |
| ஆவணி 1 | 17.08.2017 | வியாழன் | | மூன்றாம் நாள் தெப்பம் |

"திருப்புகழ் ஓதும் கருத்தினர் சேரும் தணிகையம்பதியில்" நிகழும் இவ்விழாவின் போது தமிழகத்திலிருந்து மட்டுமின்றி ஆந்திரம் கர்நாடகம் ஆகிய அண்டை மாநிலங்களில் இருந்தும் பல லட்சம் பக்தர்கள் வந்து பக்திப் பெருக்கோடு சங்கத் தமிழின் தலைமைப் புலவராம் முருகப்பெருமானுக்கு மலர்க் காவடி எடுத்து ஆடிப்பாடித் தொழுது செல்லும் திருக்காட்சி ஓர் இறை உணர்வை ஏற்படுத்தி நல்வழிப்படுத்தும்.

**"தணிகை மலையைச் சாரேனோ**
**சாமி அழகைப் பாரேனோ"**

என கீதமிசைத்து ஆடிப்பெருவிழாவில் மலர்க் காவடிகளின் அழகைக் கண்டு, அழகன் முருகனின் பொன்னடி பணிந்து வணங்கி அருள் நலம் பெற்றுச் செல்ல அன்புடன் அழைக்கிறோம்.

"பித்த பெருமான் சிவபெருமான் பெரியபெருமான் தனக்கருமைப்
பிள்ளைப் பெருமான் எனப்புலவர் பேசிக் களிக்கும் பெருவாழ்வே
மத்துப் பெருமால் நீக்கும் ஒருமருந்தே எல்லாம் வல்லோனே
வஞ்சச் சமண வல்லிருளை மாய்க்கும் ஞானமணிச்சுடரே
அத்தக்கமலத் தயிற்படை கொள்அரசே மூவர்க் கருள் செய்தே
ஆக்கல் அளித்தல் அழித்தல் எனும் அம்முத் தொழிலும் தருவோனே
சத்த உலக சராசரமும்தாளில் ஒடுக்கும் தனிப்பெருமானே
தணிகாசலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே"

-வள்ளலார்

**செ.சிவாஜி** B.Sc., B.L., M.A., M.A., M.B.A., M.Phil.,
இணை ஆணையர் / செயல் அலுவலர்

**வே.ஜெயசங்கர்**
தக்கார்

உ

திருத்தணி முருகன்　　　　　　　　　　　　　　வழித்துணை வருவார்

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
# திருத்தணிகை
# ஆடிகிருத்திகை தெப்பத்திருவிழா
# அழைப்பிதழ்

## பக்தி இசை நிகழ்ச்சிகள்
## 15.08.2017 முதல் 17.08.2017 வரை

| | |
|---|---|
| இடம் | : மலையடிவாரம் சரவணப் பொய்கை திருக்குளம். |
| மாலை 6.30 மணி | : அருள்மிகு வள்ளி தெய்வானை உடனுறை அருள்மிகு சுப்பிரமணியர் உற்சவ மூர்த்தி தெப்பத்தில் எழுந்தருளல் |
| இரவு 7.00 மணி | : தீப ஆராதனை |
| இரவு 7.15 மணி | : தெப்பத்திரு உலாகாட்சி |

## முதல் நாள் தெப்பம்

15.08.2017

மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
பணியாளர்களின் நாதஸ்வர இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.
இரவு 7.00 மணிக்கு
**ஜெயா சூப்பர் சிங்கர் புகழ் MS-in சரிகமபதநி**
இசைக்குழு மற்றும் திரைப்பட பின்னணி பாடகி
**கவிதா கோபி**
**ஜெயா சூப்பர் சிங்கர்ஸ்**
பங்கேற்கும்
**பக்தி இன்னிசை நிகழ்ச்சி**
உபயதாரர்
**R.K. லோகேஸ்வரன்**
உரிமையாளர்: சோலார் வாட்டர் ஹீட்டர் தயாரிப்பாளர்
திருவள்ளூர்

## இரண்டாம் நாள் தெப்பம்

16.08.2017

மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
பணியாளர்களின் நாதஸ்வர இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.
இரவு 7.00 மணிக்கு
**கலைமாமணி, கலாரத்னா இன்னிசை வேந்தர்,**
**கவிஞர் வழங்கிய தேவரின் M.G.R.** அவர்களின்
செல்லப்பிள்ளை **திரு. சங்கர் கணேஷ்** அவர்களும் மற்றும்
பின்னணி பாடகி இசையமைப்பாளர் **திருமதி. ஜீவாவர்ஷினி**
அவர்களும் வழங்கும்
**பக்தி இன்னிசை நிகழ்ச்சி**
உபயதாரர்
**BKR குரூப் ஆப் ஹோட்டல் & கம்பெனி**
உஸ்மான் ரோடு. தி.நகர்.
சென்னை - 600 017.

tnhrce.org

## மூன்றாம் நாள் தெப்பம்

17.08.2017

மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
பணியாளர்களின் நாதஸ்வர இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.
இரவு 7.00 மணிக்கு
**லஷ்மன் ஸ்ருதி**®
Lakshman Sruthi-100% Manual Orchestra
அவர்கள் வழங்கும் **இன்னிசை**
உபயதாரர்
**S. MITRA SRIKANTH**
MANAGING PARTNER - M/S. EXXPRESS CLEARING AGENCY
(STEVEDORES, CHA, C&F, TRANSPORTERS)
CHENNAI & TUTICORIN

உ

வேலுண்டு வினையில்லை

# தங்க ரதம்

மயிலுண்டு பயமில்லை



உ



## திருக்கோயில் சேவை கட்டணங்கள் விவரம்

| | |
|---|---|
| சந்தனக்காப்பு (சந்தனக்கட்டை கிரயம் உட்பட) | ரூ. 4000.00 |
| வெள்ளிமயில் வாகனம் மற்றும் இதர வாகனம் | ரூ. 3500.00 |
| தங்கரதம் | ரூ. 2000.00 |
| திருக்கல்யாண உற்சவம் | ரூ. 2000.00 |
| பஞ்சாமிர்த அபிஷேகம் | ரூ. 1500.00 |
| கேடயத்தில் சுவாமி புறப்பாடு | ரூ. 1000.00 |
| தங்க கவசம் சாத்துபடி | ரூ. 500.00 |
| விபூதி, பால், பன்னீர், தயிர், சந்தனம், இளநீர் (ஒவ்வொன்றுக்கும்) | ரூ. 100.00 |
| சகஸ்ரநாம அர்ச்சனை | ரூ. 400.00 |

## மாண்புமிகு முதலமைச்சரின் அன்னதான திட்ட அறிவிப்பு

இத்திருக்கோயிலில் பகல் 12.15 மணிக்கு தினமும் 300 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. பக்தர்கள் கலந்து கொண்டு பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது. உயர்வான இத்திட்டத்திற்கு நிதி உதவி செய்ய விரும்பும் பக்தர்கள் தாங்கள் விரும்பும் ஒரு நாளில் 300 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கிட ரூ. 7,500/- நன்கொடையாக செலுத்தவேண்டும். நிரந்தர முதலீட்டுத் திட்டத்தில் ரூ. 1,20,000/- செலுத்தி அதிலிருந்து கிடைக்கும் வட்டியின் மூலமாக ஆண்டுதோறும் தாங்கள் விரும்பும் ஒரு நாளில் 300 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருவருள் பெறலாம்.

tnhrce.org

## இத்திருக்கோயிலின் உபகோயில்களின் அன்னதானம் நிரந்தர வைப்புக் கட்டணம்

| | |
|---|---|
| மத்தூர், அருள்மிகு மகிஷாசூரமர்த்தினி அம்மன் திருக்கோயில் (100 நபர்கள்) | ரூ. 40000.00 |
| திருவாலங்காடு, அருள்மிகு வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில் (100 நபர்கள்) | ரூ. 40000.00 |
| பெரியநாகபூடி, அருள்மிகு நாகேஸ்வரசுவாமி திருக்கோயில் (100 நபர்கள்) | ரூ. 40000.00 |
| திருப்பாச்சூர், அருள்மிகு வாசீஸ்வரசுவாமி திருக்கோயில் (50 நபர்கள்) | ரூ. 20000.00 |
| ஆற்காடு குப்பம், அருள்மிகு சோளீஸ்வரசுவாமி திருக்கோயில் (50 நபர்கள்) | ரூ. 20000.00 |

## ஒரு நாள் அன்னதானம் செய்ய கட்டணம்

| | |
|---|---|
| திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் (300 நபர்கள்) | ரூ. 7500.00 |
| மத்தூர், அருள்மிகு மகிஷாசூரமர்த்தினி அம்மன் திருக்கோயில் (100 நபர்கள்) | ரூ. 2500.00 |
| திருவாலங்காடு, அருள்மிகு வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில் (100 நபர்கள்) | ரூ. 2500.00 |
| பெரியநாகபூடி, அருள்மிகு நாகேஸ்வரசுவாமி திருக்கோயில் (100 நபர்கள்) | ரூ. 2500.00 |
| திருப்பாச்சூர், அருள்மிகு வாசீஸ்வரசுவாமி திருக்கோயில் (50 நபர்கள்) | ரூ. 1250.00 |
| ஆற்காடு குப்பம், அருள்மிகு சோளீஸ்வரசுவாமி திருக்கோயில் (50 நபர்கள்) | ரூ. 1250.00 |

நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு உண்டு.

## மத்தூர், அருள்மிகு மகிஷாசூரமர்த்தினி அம்மன் திருக்கோயில் (உபகோயில்) சேவை கட்டணங்கள் விவரம்

| | |
|---|---|
| பஞ்சாமிர்த அபிஷேக கட்டணம் | ரூ. 1000.00 |
| சந்தனக்காப்பு, மஞ்சள் காப்பு கட்டணம் | ரூ. 101.00 |
| சகஸ்ரநாம அர்ச்சனை | ரூ. 25.00 |
| ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்று இரவு 8.00 மணிக்கு சிறப்பு பூஜை நடைபெறும், பௌர்ணமி பூஜை | ரூ. 3500.00 |

## திருவாலங்காடு, அருள்மிகு வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில் (உபகோயில்) சேவை கட்டணங்கள் விவரம்

| | |
|---|---|
| பஞ்சாமிர்த அபிஷேக கட்டணம் | ரூ. 1000.00 |
| மாந்தீஸ்வரர் பரிகார பூசை கட்டணம் | ரூ. 950.00 |
| பரணி நட்சத்திரம் பூசை கட்டணம் | ரூ. 800.00 |

இத்திருக்கோயில் ஐந்து சபைகளில் முதலாம் சபையாகும்
இங்கு ஆருத்ரா அபிஷேகம் மற்றும் கார்த்திகை மாத தெப்பத்திருவிழா சிறப்பாகும்
(திருக்கோயில் நேரம் காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை)

## அன்பான வேண்டுகோள்

இத்திருக்கோயிலில் தற்போது 122அடி உயரத்தில் 9 நிலை இராஜகோபுரம் கட்டும் பணி தொடங்கப்பட்டு கல்காரம் வரை பணி முடிந்துள்ளது. 1ம் நிலை முதல் 9ம் நிலை வரை உள்ள கோபுர கட்டுமானப் பணிகள் நடைபெற உள்ளது. மேலும் பக்தர்களின் வசதிக்காக பல்வேறு நலத்திட்ட திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த அறப்பணியில் தங்களையும் ஈடுபடுத்திக்கொண்டு தங்களால் ஆன பொருளுதவி வழங்கி, திருத்தணிகை முருகனின் திருவருள் பெற்று நீடூழி வாழ அன்புடன் வேண்டுகிறோம்.

## இணையதள சேவை அறிவிப்பு

இத்திருக்கோயிலில் பக்தர்களின் வசதியை கருத்தில் கொண்டு தங்குவதற்கு குடில்கள் அறைகள், அபிடேகங்கள் மற்றும் உற்சவங்கள் ஆகியன இணைய தளம் (Online) மூலம் முன்பதிவு செய்து கொள்ளும் வசதிகள் செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது.

இணையதள முகவரி

www.tirutanigaimurugan.tnhrce.in

## வைர அட்டை வழங்கும் திட்டம்

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மற்றும் இதனுடன் இணைந்த உபகோயிலில் நடைபெற்று வரும் அன்னதான திட்டத்திற்கு குறைந்தபட்சம் ரூ. 7 இலட்சம் மற்றும் அதற்கு மேல் நன்கொடை வழங்குபவர்களுக்கு வைர அட்டை வழங்கும் திட்டம் இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் நன்கொடையாளர்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து திருக்கோயில்களிலும் குடும்பத்துடன் விரும்பும் நாட்களில் இலவசமாக சிறப்பு தரிசனம் செய்ய அனுமதிக்கப்படும்.

tnhrce.org

## பிளாட்டினம் அட்டை வழங்கும் திட்டம்

இத்திருக்கோயிலுக்கு ரூ. 1 கோடி மற்றும் அதற்குமேல் நன்கொடை வழங்குவோர்க்கு பிளாட்டினம் அட்டை வழங்கப்படும். அப்பிளாட்டினம் அட்டை மூலமாக நன்கொடையாளர் குடும்பத்தார் தமிழகத்தின் அனைத்துத் திருக்கோயில்களிலும் 10 நபர்களுக்கு மிகாமல் 20 வருடங்களுக்கு சிறப்பு தரிசனம் செய்ய முன்னுரிமை வழங்கப்படும்.

## திருப்படி பூசை கட்டளை திட்ட அறிவிப்பு

திருப்புகழ் திருப்படி திருவிழாவினை முன்னிட்டு பிரதி வருடம் டிசம்பர் 31ம் நாள் 365 படிகளுக்கும் திருப்படி பூசை நடைபெறுகிறது. படி ஒன்றுக்கு பூசை செய்ய நிரந்தர கட்டளையாக ரூ.501 காணிக்கையாக செலுத்த வேண்டும். சிறப்பு மிக்க படி பூசையில் பக்தர்கள் உறுப்பினர்களாக கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## திருக்கோயில் பூசை நேரங்கள்

| | | |
|---|---|---|
| விசுவரூப தரிசனம் | : | காலை 6.00 |
| கால சந்தி அபிஷேகம் | : | காலை 8.00 |
| திருக்கல்யாணம் | : | காலை 11.00 |
| உச்சிகால அபிஷேகம் | : | நண்பகல் 12.00 |
| சாயரட்சை அபிஷேகம் | : | மாலை 5.00 |
| அர்த்தசாம ஆராதனை | : | இரவு 7.30 |
| பள்ளியறை | : | இரவு 9.00 |

(விழாக் காலங்களில் அபிஷேக நேரங்கள் மாறுதலுக்குட்பட்டன)

**உபயத்திருப்பணி செய்ய விரும்பும் நன்கொடையாளர்கள் பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோரும், பிற விவரங்களுக்கும் தொடர்பு கொள்ள**

இணை ஆணையர் / செயல் அலுவலர்

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

திருத்தணி631209, திருவள்ளூர் மாவட்டம்

அலுவலகம் : (044) 27885247, மலைக்கோயில் : 27885243, 27885201

e-mail : tiruttanigaimurugan@gmail.com

website : www.tirutanigaimurugan.tnhrce.in